*7*

# சபையில் பேசப் பெண்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனரா?

*"சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே" (1 கொரிந்தியர் 14:34, 35).*

சபைகளில் பெண்கள் அமைதியாய் இருக்க வேண்டும் என்பதற்கு 1 கொரிந்தியர் 14:34, 35ல் உள்ள கட்டளையைப் பரிசோதிப்பதில் நாம், முதலில் 33ம் வசனத்தின் இறுதிப்பகுதியில் உள்ள "சபைகளெல்லாவற்றிலும்" என்ற சொற்றொடரை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இது 33 அல்லது 34ம் வசனத்துடன் இணைந்து செல்ல வேண்டுமா? F. W. குரொஷெய்டு என்பவர் ஒரு நல்ல உற்றுக்கவனித்தலை ஏற்படுத்தினார்:

> வசனம் 33அவின் வார்த்தைகள் மற்ற எந்தத் தகுதியையும் மேற்கொள்ள மறுப்பதால், சபைகளெல்லாவற்றிலும் என்ற தொடர்சொல்லைச் சிலர் செய்ய முயற்சிசெய்துள்ளதுபோல் முந்தியவற்றுடன் (மட்டும்) எடுத்துக்கொள்ளப்பட இயலாது. பின்தொடரும் வார்த்தைகளுடன் அதை எடுத்துக்கொள்ளும்போது, இக்கட்டளையானது கொரிந்தியர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் எல்லா சபைகளுக்கும் தரப்பட்டுள்ளது என்பது தகுதியான நினைவூட்டுதலாக உள்ளது (இ.வ. 7:17).[1]

பின்வரும் கேள்வியானது மிகமுக்கியமானதாகியுள்ளது: "தேவனுடைய மக்கள் முழுவதும் குழுமமாகக் கூடி வந்துள்ளபோது, பெண்கள் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனரா?" பவுல், "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 14:34).

இவ்வசனப்பகுதியில் பவுல், பெண்கள் பொதுவான [சபை] கூடுகைகளில் பேசுவதைத் தடைசெய்துள்ளார் என்று பல கல்வியாளர்கள் நினைக்கின்றனர். மற்றவர்களோ, இது பொதுவான சபைகூடுகைகளில்

பெண்கள் பேசுதலுக்கு எல்லா வேளைகளிலும் நடைமுறைப்படுவதில் லை என்று நம்புகின்றனர், ஆனால் இது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளின் அமைவில் மட்டும் நடைமுறைப்படுகிறது என்று அவர்கள் நினைக் கின்றனர். இன்னும் சிலர், இது முதல் நூற்றாண்டு சபைக்கு நடைமுறைப் பட்டது, ஆனால் இப்போது இது நடைமுறைப்படுவதில்லை என்று நினைக்கின்றனர்.

## பவுல் தமது கூற்றுக்குத் தாமே முரண்பட்டாரா?

சிலர் 1 கொரிந்தியர் 11:2-17 மற்றும் 1 கொரிந்தியர் 14:34, 35 ஆகிய வசனங்களில் பவுல் தமக்குத் தாமே முரண்பட்டதாக நினைக்கின்றனர். அவரது போதனையில் உள்ளதாகக் காணப்படுகின்ற இந்த முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நியாயமான பிற விளக்கங்கள் தரப்பட முடியும் என்றால், முரண்பாடு ஒன்றைக் கற்பிதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சபையின் பொதுவான கூடுகை மாத்திரமே பெண்கள் ஜெபிக்கக்கூடிய அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கக்கூடிய ஒரே இடமாக இருக்கும் என்றால், பவுல் தமக்குத் தாமே முரண்படக்கூடியவராகவே இருந்திருப்பார். இருப்பினும், பெண்கள் மற்ற பல சூழ்நிலைகளில் ஜெபிக்கவும் தீர்க்கதரிசனம் உரைக்கவும் முடிந்திருக்கக்கூடும். பிலிப்பி நகரத்தில் மத நோக்கங்களுக்காகப் பெண்கள் ஒன்றுகூடினர் என்ற உண்மை யானது (நடபடிகள் 16:13), இது கிறிஸ்தவப் பெண்களினிடையிலும் ஒரு பொதுவான வழக்கமாயிருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. 1 கொரிந்தியர் 14:34, 35ன் விதியமைப்பானது “சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடி” வரும்போது மாத்திரம் நடைமுறைப்பட வேண்டியதாக உள்ளது (1 கொரிந்தியர் 14:23), அதே வேளையில், 1 கொரிந்தியர் 11:5, சபையின் பொதுவான கூடுகை தவிர மற்ற வேளைகளுக்கு நடைமுறைப்படுவதாக இருக்கலாம்.

## சபையாரெல்லாரும்

1 கொரிந்தியர் 14ல் பவுல், சபையானது பக்திவிருத்தியூட்டப்படும்படி சபையின் பொதுவான கூடுமை என்பது பற்றிய குழப்பத்தை விடுவிக்க நாடினார் (வசனங்கள் 4, 5, 12, 19). சபைகூடுகைகளில் சீர்குலைவான பல்வேறு நடைமுறைகள் நடத்தப்பட்டதால் அதில் குழப்பம் வளர்ந்திருக்கலாம். (1) அர்த்தம் கூறுபவர் இல்லாத நிலையில், அற்புத விதமாக பாஷைகள் பேசப்பட்டிருந்தன (1 கொரிந்தியர் 14:23). (2) ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்க்கதரிசிகள் பேசிக் கொண்டிருந்தனர் (1 கொரிந்தியர் 14:27). (3) சபைகூடிவருகையில் பெண்கள் பேசிகொண்டிருந்தனர், மற்றும் அவர்கள், தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்த ஆண்களிடத்தில் கேள்விகேட்டு அவர்களின் தீர்க்கதரிசன உரையை இடைமறித்துக் கொண்டிருந்திருக்கக்கூடும் (1 கொரிந்தியர் 14:34, 35).

*இந்த சூழ்நிலையைத் திருத்துவதற்காகப் பவுல் ஒவ்வொரு குழுவிற்கும் [சிலவற்றை] எடுத்துரைத்தார். அந்நிய பாஷைகளில் பேசுபவர்கள், அர்த்தம் கூறுபவர் இருந்தால் மாத்திரம் ஒவ்வொருவராகப் பேசவேண்டும் (1 கொரிந்தியர் 14:27, 28). தீர்க்கதரிசிகளும் ஒவ்வொருவராகப் பேசவேண்டும், அவர்கள் கூறுவதை மற்றவர்கள் நிதானிக்க வேண்டும் (1 கொரிந்தியர் 14:29-31). பெண்கள் அமைதியாயிருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 14:34), ஏனென்றால் "ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே" (1 கொரிந்தியர் 14:35).*

*பெண்களுக்கான உத்தரவைப் புரிந்து கொள்வதற்கு, நான்கு அடிப்படைக் கொள்கைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும். முதலாவது, இந்த உத்தரவு "சபையாரெல்லாரும்" கூடிவந்திருந்தால் நடைமுறைப் படுவதாக இருந்தது (1 கொரிந்தியர் 14:23), எனவே இது முழுசபையும் கூடிவராதபோது நடைமுறைப்படவில்லை. பவுல், ஒரு வேதாகம வகுப்பு ஏற்பாட்டைப் பற்றி [இங்கு] எழுதவில்லையாதலால், இந்த உத்தரவு அனேகமாக, ஒரு வகுப்பு சூழ்நிலைக்கு நடைமுறைப்படாததாக இருக்கலாம். இவ்வசனத்தை, சபையாரெல்லாரும் கூடியிராத ஒரு வகுப்பு சூழ்நிலைக்கு நடைமுறைப்படுத்துதல் என்பது, பவுலினால் கருதப்பட்டிராத ஒரு காட்சியமைவிற்கு இதை நடைமுறைப்படுத்துதலாக இருக்கும். ஒரு வசனப்பகுதியில் பேசப்பட்டிராத வேளைகளின்மீது நாம் கட்டுப்பாட்டை விதிக்கக்கூடாது.*

*இரண்டாவது, ''பேச'' என்பதன் அர்த்தத்தை, அதன் சந்தர்ப்பப்பொருள் வேறுவிதமாய்ச் சுட்டிக்காண்பிக்காத வரையில், அது தோற்றமளிக்கும் காட்சியமைவினால் தீர்மானிக்க வேண்டும் மற்றும் அதன் அடிப்படை அர்த்தம் தக்கவைக்கப்பட வேண்டும். "பேச" என்பது, "பேச" அல்லது "ஒரு ஒலியை உச்சரித்தல்" என்று அர்த்தப்படுகிற lalein என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. இவ்வார்த்தை புதிய ஏற்பாட்டில் 299 முறைகள் காணப்படுகிறது மற்றும் இவற்றில் பெரும்பான்மையான இடங்களில் இது "பேச்சை உச்சரித்தல்" அல்லது "பேசுதல்" என்றே அர்த்தப்படுகிறது. இந்தச் சொற்றொடர் 1 கொரிந்தியர் 14ல் இருபத்து நான்கு முறைகள் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டின் பிற வசனப்பகுதிகளில் உள்ளது போன்றே இவ்விடத்திலும், வார்த்தைகளை உச்சரித்தல் அல்லது "பேசுதல்" என்பதே lalein என்ற வார்த்தையின் சந்தர்ப்ப அர்த்தமாக உள்ளது. "பாஷைகளில்" (*Gk.: *glossa*; *1 கொரிந்தியர் 14:2, 4, 5, 6, 9, 13, 14, 18, 19, 22, 23, 26, 27) பேசியவர்கள் உளறவில்லை அல்லது தெளிவற்ற சத்தங்களை உச்சரிக்கவில்லை. பாஷைகளில் பேசியவர், தாம் அறிந்திராத, தான் படித்திராத அல்லது கற்றிராத மொழி யில், சபை முழுவதற்கும் அற்புதவிதமாகப் பேசினர் (1 கொரிந்தியர் 14:23). இதற்கு மறுபுறத்தில் தீர்க்கதரிசிகள், அவர்கள் அறிந்திருந்த பாஷையில் (1 கொரிந்தியர் 14:29) சபையாரெல்லாருக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தனர். 1 கொரிந்தியர் 14:34ன் சந்தர்ப்பத்துவ அமைவில், lalein ("பேசுதல்") என்பது ஒரு செய்தியை சபைக்கூட்டத்தினருக்கு உரைத்தல் என்று அர்த்தப்படுகிறது. இந்த அமைவில் ''பேசுதல்'' என்பது, பாடல்களைப் பாடுதலையல்ல*

*ஆனால் ஒரு பொது உரையை ஏற்படுத்துதலைக் குறிக்கிறது.*

> *பேசுதல் [lalein] மற்றும் அமைதியாயிருத்தல் [sigao] என்பதன் இயல்பானது அதே வார்த்தைகளை முந்திய வசனங்களில் (27-30) அந்நிய பாஷைகளில் பேசுபவர் மற்றும் தீர்க்கதரிசி ஆகியோர் பேசுவதற்குப் பயன்படுத்தியதில் இருந்து தெளிவாகிறது. அங்கு மொழிநடையானது சபைகூடுகைக்கு பொதுவாக உரையாற்றுதல் மற்றும் அப்படிப்பட்ட உரையை விட்டொழித்து அமைதியாயிருத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.*[2]

*மூன்றாவது, "அமைதியாயிருத்தல்"* (Gk.: *sigao*; *1 கொரிந்தியர் 14:34), "அமைதியுடன் இருத்தல்" அல்லது "அமைதி காத்தல்" என்பதன் அர்த்தமும் இதுவும் முக்கியமானதாக உள்ளது. வேறொரு பாஷையில் அற்புதவிதமாகப் பேசியவர்களுக்கு sigao ("அமைதி காத்தல்") என்பது, அவர்கள் பேசுவதை நிறுத்த வேண்டும் அல்லது சபைமுழுவதற்கும் அதை உரைப்பதில் இருந்து நீங்கியிருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்திற்று (1 கொரிந்தியர் 14:28). இந்த அறிவுறுத்துதல், பேசிக்கொண்டிருந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் அதையே அர்த்தப்படுத்திற்று (1 கொரிந்தியர் 14:30). பேசிக் கொண்டிருக்கும் ஒருவரிடத்தில் இன்னொருவர் கேள்விகேட்கும் வகையில் ஆண்கள் "பேச" முடிந்தது என்பது தெளிவு. குறைந்தபட்சம், பாஷைகளில் பேசுபவர்களிடம் அல்லது தீர்க்கதரிசிகளிடம் ஆண்கள் கேள்விகளைக் கேட்பதற்குத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை என்பது தெளிவு. இன்னொருவர் பேசும்போது, பாஷைகளில் பேசுபவர் அல்லது தீர்க்கதரிசிகள் "அமைதி காக்க" வேண்டும் அல்லது பேசுவதை விட்டு நீங்கியிருக்க வேண்டும். ஆகையால் இந்தப் பகுதியில் sigao என்பது சபையாருக்கு உரை நிகழ்த்தும்படி தரையில் நிற்கலாகாது என்ற கருத்துணர்வில் ''அமைதி காத்தல்'' என்பதாக அர்த்தப்படுத்திற்று. ''சபையில் ஸ்திரீகள் பேசுவது [அல்லது ஒரு உரைநிகழ்த்துவது] அயோக்கியமாயிருக்குமே" (1 கொரிந்தியர் 14:35) என்பதால், பெண்கள் மீது பவுல் இதே கட்டுப்பாட்டை விதித்தார்.*

*நான்காவது, ''பேசுதல்'' மற்றும் ''அமைதி காத்தல்'' ஆகியவற்றைப் பற்றிய நமது முடிவுகளில் நாம் சரியாக இருந்தால், பெண்களுக்குப் பவுலின் அறிவுறுத்தலானது, அவர்கள் சபையாரெல்லாருக்கும் ஒரு உரைநிகழ்த்த மேடையில் ஏறலாகாது, ஆனுல் உரைநிகழ்த்தும் மேடையில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்பதாக இருந்தது. இது பெண்கள் சபையாருடன் சேர்ந்து பாடுதலில் அங்கம் வகித்தல் பற்றி எதுவும் கூறுவதில்லை. பேசுபவர்களிடம் இடையிடுதலைத் தவிர்ப்பதற்காகப் பவுல், ஏவுதல் பெற்ற செய்திகளை எடுத்துரைப்பவர்களிடம் கேட்பதற்குப் பெண்கள் ஏதேனும் கேள்விகளைக் கொண்டிருந்தால், அவர்கள் வீடுகளில் தங்கள் கணவர்களிடம் அவற்றைக் கேட்க வேண்டும் என்றும் கூறினார்.*

## மற்ற ஆழ்ந்த சிந்தனைகள்

*இந்த அணுகுமுறை, முக்கியமான சில கேள்விகளை எழுப்புகிறது.*

*(1) இந்த விதிமுறையைப் பவுல், பழக்கவழக்கம் அல்லது கலாச்சாரத்தின் அடிப்படையில் இன்றி, நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் விதித்தார் என்றால், 34ம் வசனத்தில் பவுல், "வேதம்" என்று எதைப்பற்றிக் குறிப்பிட்டார்? பொதுகூடுகைகளில் பெண்கள் பேசுவதற்கு மோசேயின் நியாயப்பிரமாணம் தடைவிதிக்கவில்லை அல்லது அது, ஆராதனை அமைவில் பெண்கள் கீழ்ப்படிதலுடன் இருக்கும் பாடக்கருத்து பற்றி எதுவும் உரைப்பதில்லை.*

*மோசேயின் நியாயப்பிரமாணத்தில் காணப்படாத கூற்றுக்களைக் குறிப்பிடும்போதுகூட, இயேசு, பழைய ஏற்பாட்டின் எழுத்துக்களை உள்ளடக்குவதற்கு "உங்கள் பிரமாணம்" என்பதை பயன்படுத்தினார் (சங்கீதம் 82:6ஐக் குறிப்பிடும் யோவான் 10:34; சங்கீதம் 35:19ஐக் குறிப்பிடும் யோவான் 15:25). பவுல் 1 கொரிந்தியர் 14:21ல் "வேதம்" என்பதைக் குறிப்பிடும்போது இதையே செய்தார் மற்றும் அதன்பின்பு அவர் ஏசாயா 28:11ல் இருந்து மேற்கோள் காண்பித்தார். இதன் விளைவாக, பவுல் தனது சிந்தையில் கொண்டிருந்த "வேதம்" என்பதைக் கண்டறிவதற்கு நாம், மோசேக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கண்ணோக்க வேண்டியதில்லை. பவுல், ஆதியாகமம் 3:16ஐ மறைமுகமாய்க் குறிப்பிட்டார்: "அவன் உன்னை ஆண்டுகொள்வான்." 1 கொரிந்தியர் 14:35ல் பெண்கள் "அமைதியாய் இருக்க" வேண்டும் என்று வேதம் கூறியதாகப் பவுல் சொல்லவில்லை, ஆனால் அவர்கள் "கீழ்ப்படிதல்" உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் கட்டளையிட்டதாக உரைத்தார். அவர், "அமைதியாய்" இருத்தல் என்பது அவர்கள் "கீழ்ப்படிதல்" உள்ளவர்களாய் இருந்தனர் என்று காண்பித்ததாக மறைமுகமாய் உணர்த்தினார்.*

*(2) பவுல் எந்தப் பெண்களைப் பற்றி எழுதினார்? "ஸ்திரீகள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட gunaikes என்ற வார்த்தை gune என்பதன் பன்மைப்பதமாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 14:34), இது "பெண்கள்" அல்லது "மனைவிகள்" என்று அர்த்தப்படக்கூடும். இந்தக் காரணத்தினால், இவ்வசனப்பகுதியில் பவுல், தீர்க்கதரிசிகளின் மனைவிகள் தங்கள் கணவர்களை இடைமறித்தலைத் தடைசெய்தார் என்று சிலர் முடிவு செய்கின்றனர். இது ஒரு சாத்தியக்கூறாக உள்ளது; இருப்பினும், இவ்விடத்தில் பவுல், தீர்க்கதரிசிகளின் மனைவிகளை அர்த்தப்படுத்தியிருந்தால், இது "அவர்களின்" மனைவிகள், அதாவது தீர்க்கதரிசிகளின் மனைவிகள் அமைதிகாக்க வேண்டும் என்று விளக்கப்படுத்துகிற இயல்பான வழிமுறையாயிருக்கும். பவுல் இவ்விடத்தில் சிறப்புப்பெயர்ச்சொல் எதையும் பயன்படுத்தவில்லை என்ற விஷயம், அவர் "அவர்களின்" மனைவிகளை அல்ல ஆனால் பொதுவாகப் பெண்களையே அர்த்தப்படுத்தினார் என்று சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம். மேலும் மூலகிரேக்க வசனத்தில் பெண்களைப் பற்றிய அவரது இரண்டாவது குறிப்புரையில் சுட்டுச்சொல் எதுவும் இருப்பதில்லை ("... ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே"; 1 கொரிந்தியர் 14:35), இது பொதுவாக (எல்லாப்) பெண்களுமே இவ்விடத்தில்*

கருதப்பட்டனர் என்று சுட்டிக்காண்பிக்கும். தீர்க்கதரிசிகளின் மனைவிகள் சபையில் பேசுகிறது அயோக்கியமாய் இருக்கும், ஆனால் மற்ற எல்லாப் பெண்களும் பேசலாம் என்று கூறி, அவர் இந்த உத்தரவைத் தீர்க்கதரிசிகளின் மனைவிகளுக்கு மாத்திரம் வரையறைப்படுத்தவில்லை என்பது உறுதி.

(3) [இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்ட] புருஷர்கள் என்பவர்கள் யார்? *Aner* என்ற வார்த்தையின் பன்மைப்பதமான *andras* என்பது, "ஆண்கள்" அல்லது "கணவர்கள்" என்று அர்த்தப்படக்கூடும். இங்கு *idious* ("சொந்த") என்ற சிறப்புப்பெயர்ச்சொல்லின் பயன்பாடானது, பெண்கள் தங்கள் "சொந்த ஆண்களிடம்" கேட்க வேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கிறது. இது வழக்கமாகக் கணவர்களைச் சுட்டிக்காண்பித்தது, ஆனால் இந்தக் காட்சியமைவில் இது கணவர்களையோ அல்லது பொதுவாக ஆண்களையோ உள்ளடக்கக்கூடும். அக்காலத்தில் திருமணங்கள் வாழ்வின் மிகவும் இளமைப்பருவத்திலேயே நடைபெற்றது என்ற உண்மையானது, திருமணமாகாத பெண்களில் பெரும்பான்மையானவர்கள் சிறுமிகளாய் இருந்தனர் என்று அர்த்தப்படுத்திற்று. திருமணமாகாத பெண்கள் இயல்பாகவே, முதியவர்களின் ஆலோசனைகளை மதிப்பார்கள் என்பதாலும், அவர்களின் இளம் வயதினிமித்தம் அமைதியாக இருப்பார்கள் என்பதாலும், அவர்கள் இவ்விடத்தில் பவுலினால் சிந்திக்கப்படாது இருக்கலாம். எனவே அவர்கள் கேள்விகள் கேட்க விரும்பினால் திருமணமான பெண்களுக்கு நடைமுறைப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றவேண்டும், மற்றும் அவர்கள் தனிப்பட்ட அமைவில் ஆண்களிடம் தங்கள் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

ஒரு கணவர் என்பவர் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கலாம் அல்லது அவர் பதிலைக் கண்டறிய ஒரு தீர்க்கதரிசியிடம் கேள்விகேட்டு அதைப் பின்பு குடும்பத்தில் மனைவிக்கு விளக்கப்படுத்தலாம். தேவனுடைய முழுமையான வெளிப்படுத்துதல் வேதாகமத்தில் பதிவுசெய்யப்படாது இருந்தபடியால், பல கேள்விகள் அக்காலத்தில் எழுவதற்கு வாய்ப்பிருந்தது. இப்போது, புதிய ஏற்பாட்டை வாசிப்பதால், ஆண்களும் பெண்களும் நேரடியாக தீர்க்கதரிசிகளிடம் கேள்விகள் கேட்க அவசியம் இல்லாமலேயே தீர்க்கதரிசிகளிடமிருந்து, பதில்களைக் கண்டறிய முடியும்.

மனைவி ஒரு கிறிஸ்தவளாகவும் கணவர் கிறிஸ்தவரல்லாதவராகவும் உள்ள சூழ்நிலையைப் பவுல் இவ்விடத்தில் குறிப்பிடவில்லை. அவள், பவுலின் அறிவுறுத்துதல் திருமணமாகாத பெண்ணுக்கு போன்றே தனக்கும், சபையின் பொதுவான கூடுகையில் அல்ல ஆனால் தனிப்பட்ட வகையில் தீர்க்கதரிசியிடம் பதில்களை நாடிக் கேள்விகேட்பதே சரி என்று முடிவுசெய்யலாம்.

(4) "வீட்டிலே" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? இது, பெண்ணானவள் தனது சொந்த வீட்டில் தனிப்பட மாத்திரமே கேள்விகேட்க முடியும் என்று மறைமுகமாய் உணர்த்துகிறதா? "வீட்டிலே" என்பது இந்த சந்தர்ப்பப்பொருளில், 1 கொரிந்தியர் 11:34ல் உள்ள "வீட்டிலே" என்பதைக் காட்டிலும் அதிகம் கட்டுப்படுத்துவதாக இருப்பதில்லை: "ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக் கடவன்,

...” “வீட்டிலே” என்பது அந்த சந்தர்ப்பப்பொருளில், ஒருவரது சொந்த வீட்டுடன் மாத்திரம் கட்டுப்பாடு செய்வதாக இருந்தால், கிறிஸ்தவர்கள் தங்கள் வீட்டைத்தவிர, உணவகம், பூங்கா அல்லது வேறு எந்த இடத்திலும் உணவு உண்ண இயலாது.

ஒரு தந்தையானவர், தனது மகன் ஆராதனை வேளையின்போது ஒரு புத்தகத்தைப் படிக்க விரும்புகின்றபோது, “மகனே, நீ அந்தப் புத்தகத்தை வீட்டிலே வாசிக்கலாம்” என்று கூறலாம். அவர் தனது மகன் அந்தப் புத்தகத்தை வீட்டிற்கு வெளியே வாசிக்கக்கூடாது என்று கூறவில்லை, ஆனால் அந்தப் புத்தகம் சபையிலே தவிர மற்ற இடத்தில் வாசிக்கப்படுவது தகுதியானதாக இருக்கும் என்றே கூறுகின்றார். அதுபோலவே பவுல், “வீட்டிலே” என்பது சபையாரெல்லாரும் பொதுவாகக்கூடிவரும் கூட்டத்திற்கு வெளியில் என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்தியிருக்கலாம். அப்படியென்றால், வகுப்பறையானது “வீட்டிலே” என்ற காட்சியமைவிற்குத் தகுதியானதாக இருக்கும்.

ஒன்று கொரிந்தியர் நிருபம், பொதுகூடுகைகளில் ஆண்கள் பேசுவதற்கும் கேள்விகள் கேட்பதற்கும் உரிமை கொண்டிருந்தனர், ஆனால் பெண்கள் அந்த உரிமையைக் கொண்டிருக்கவில்லை என்று தெளிவாக போதிக்கிறது. இந்த உத்தரவானது பெண்கள் என்பது தீர்க்கதரிசிகளின் மனைவிகளைக் குறித்தாலும் அல்லது பொதுவாகப் பெண்களைக் குறித்தாலும் நடைமுறைக்கு உகந்ததாக உள்ளது, ஏனெனில், “ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே” (14:35).

(5) “அயோக்கியம்” என்பதன் அர்த்தம் என்ன? *Aischron* என்ற இவ்வார்த்தை “வெட்கக்கேடு” என்று மறைமுகமாய் உணர்த்துகிறது (1 கொரிந்தியர் 14:35; 1 கொரிந்தியர் 11:6 மற்றும் எபேசியர் 5:12லும் உள்ளது). The Danker-Bauer Greek-English Lexicon[3] என்ற புத்தகம் இதை “அவமானம் நிறைந்தது” என்று விளக்குகிறது. ஒரு பெண், சபைக்கூடுகையில் பேச வேண்டுமென்றால், அவள் தனக்குத் தகுதியற்ற இடத்தில் பேசுவதாயிருக்கும், இவ்விதமாக அவள் ஒரு அவமான செயலில் ஈடுபட்டிருப்பாள்.

## வரங்களைச் செயல்படுத்தும் அமைவு

1 கொரிந்தியர் 14ன் முந்திய பகுதியில் பவுல், ஆவிக்குரிய வரங்களைப் பற்றிக் கலந்துரையாடியிருப்பதால், இந்த உத்தரவானது ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்தும்போது மாத்திரம் நடைமுறைப்படுவதாக சிலர் முடிவுசெய்துள்ளனர். F. W. குரொஷெய்டு என்பவர் பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டார்:

> 14:34ம் வசனத்தை அதன் சந்தர்ப்பப்பொருளில் இருந்து துண்டிக்கக்கூடாது என்பது இன்னொரு மறுப்பாக உள்ளது, மற்றும் இந்த சந்தர்ப்பப்பொருளானது பாஷைகளில் பேசுதலையும் தீர்க்கதரிசனம் உரைத்தலையும் பற்றிக் கலந்துரையாடி அந்த வரங்களை எப்படிப்பயன்படுத்துவது என்றும் விளக்கப்படுத்துகிறது.

எனவே பெண்கள் இந்த ஊழியங்களின்போது இப்படிப்பட்ட கலந்துரையாடல்களில் பிரவேசிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த விளக்கம் மிகத்தொலைவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது, ஏனெனில் பவுல் மிகவும் பொதுவான சொற்றொடர்களில் பேசியுள்ளார் மற்றும் அவர் கொரிந்தியர்களின் நிலையைப் பற்றி மாத்திரம் நினைத்திருப்பதில்லை (எல்லா சபைகளிலும், அயோக்கியமாயிருக்குமே முதலியன.).[4]

பெண்கள் இப்படிப்பட்ட அமைவில் அமைதியாயிருக்க வேண்டியதும், ஆவிக்குரிய வரங்கள் செயல்படுத்தப்படாதபோது, அவர்கள் பேச அனுமதிக்கப்பட வேண்டியதும் ஏன்? வரம் பெற்ற பெண்கள் தங்கள் வரங்களை, வரங்கள் செயல்படுத்தப்படும் காலத்தில்தான் பயன்படுத்த வேண்டியிருந்தது என்பதாக காணப்படுகிறது, அதாவது, பேசுதல் அல்லது கேள்விகேட்டல் ஆகியவற்றை அப்போதுதான் அவர்கள் செய்ய வேண்டியிருந்தது. பவுல், வித்தியாசப்பட்ட குழுக்களுக்கு விஷயங்களைக் கூறிக்கொண்டிருந்தார்; பாஷைகளில் பேசுபவர்கள், தீர்க்கதரிசிகள், மற்றும் பொதுவான சபைகூடுகைகளில் இருந்த பெண்கள் (1 கொரிந்தியர் 14:23-35).

## முடிவுரை

சபையார் யாவருக்கும் உரையாற்றுவதற்குப் பெண்கள் மேடையில் ஏறத் தடைவிதிக்கப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட அமைவில் அவர்கள் “பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை” அதாவது அவர்கள் உரையாற்றவோ அல்லது கேள்வி கேட்கவோ கூடாது (1 கொரிந்தியர் 14:34). மேடையின் மையத்தை ஆக்கிரமிப்பது கீழ்ப்படிதலில் குறைபாட்டைக் காண்பிக்கும். இந்தக் காரணத்தினால் சபையாருக்கு பெண்கள் உரையாற்றுவது அயோக்கியமாயிருந்தது. சபையின் பொதுவான கூடுகையில் அதிகாரத்தின் இடத்தைக் கொண்டிருத்தல் பற்றிய எவ்வித மறைமுகமான கருத்துக்களையும் தவிர்ப்பதற்காக, பெண்கள் தனிப்பட்ட அமைவில் கேள்விகேட்க வேண்டியதாக இருந்தனர்.

கிறிஸ்தவப் பெண், கர்த்தருடைய வசனத்தைப் பேச, ஒரு வாரத்தில் 168 மணி நேரத்தைக் கொண்டிருக்கின்றாள் - ஆனால் சபை நடத்தப்படும் மூன்று அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான நேரத்தில் அல்ல. சில விஷயங்களில், அவள் ஆண்களைக் காட்டிலும் அதிகமான தொடர்புகளையும் அதிகமான வாய்ப்புகளையும் கொண்டிருக்கின்றாள். அவள் வாழ்வுதரும் அற்புதம் நிறைந்த வசனங்களைப் பரப்புவதற்குப் பேசும்படி தனது நேரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார். இந்த வாய்ப்புகள் கிடைக்கும்போது பேசுவதன்மூலம் அவள் தேவனை மகிமைப்படுத்தவும், இயேசுவைப் பின்பற்றும்படி மக்கள் பலரிடத்தில் செல்வாக்கு செலுத்தவும் முடியும்.

குறிப்புகள்

[1]F. W. Grosheide, *Commentary on the First Epistle to the Corinthians*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 341. [2]Everett and Nancy Ferguson, "NT Teaching on the Role of Women in the Assembly," *Gospel Advocate* (October 1990): 29. [3]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt, F. Wilbur Gingrich, and Frederick W. Danker (Chicago, Ill.: University of Chicago Press, 1979), 24. [4]Grosheide, 342.